(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE IV ADDITIONAL DISTRICT JUDGE , MADURAI.

S.C .No. 323/17

**DEPOSITION OF PW 5 WITNESS FOR PROSECUTION / DEFENCE**

Name : சதீஸ்வரன்

Father's name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 5.12.2017

மு வி ---

நான் தற்போது ஆணையூர் சிலோன் காலனியில் குடியிருக்கிறேன். எதிரிகனை தெரியும். 22.2.17 அன்று நான் வேலைக்கு போய் விட்டேன். மகாத்மாகாந்தி நகரில் வேலை பார்ததேன். மதியம் 3 மணிபோல் ஆஜர் எதிரி ராஜேஷ் வந்தார். என்னிடம் குழி தோண்ட தெரியுமா என்று கேட்டார் நான் தெரியாது என சொன்னேன். என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தனர். இது சம்பந்தமாக என்னை நீதிபதி முன்பு வாக்குமூலம் கொடுத்தேன். அந்த வாக்குமூலம் அசாஆ 7.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதியளிக்கப்பட்டது)

என்னை போலிசார் விசாரித்த போது என்னிடம் ராஜேஷ் குழி தோண்ட கேட்டார் என்றால் சரிதான். நான் எதற்கு என்று கேட்டேன் தான் கொலை செய்து விட்டதாக அதை புதைப்பதற்காக கேட்டேன் என சொன்னார் என்று சொன்னால் சரியல்ல. நீதிபதி முன்பு அவ்வாறு சொன்னேன். ஆனால் அவர் விளையாட்டுக்கு சொன்னதாக சொல்லியிருக்கிறேன்.

கு வி -- அனைத்து எதிரிகள் தரப்பில்

நீதிபதி விசாரணையில் போலிசார் சொல்லி கொடுத்ததன்படி சொன்னேன் . போலிசாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் ராசேசை பார்க்கவில்லை என்றாலும் அவர் என்னிடம் குழி தோண்ட சொல்லவில்லை என்றாலும் சரியல்ல.

ம வி --

இல்லை.